**மே – 19**

# TNPSC துளிகள்

- சென்னையைச் சேர்ந்த 19 வயதான L.R. ஸ்ரீஹரி, இந்தியாவின் 86வது கிராண்ட்மாஸ்டர் பட்டத்தினை வென்றுள்ளார்.
- பெரு மதிப்பு மிக்க ஆஸ்டர் கார்டியன்ஸ் உலகளாவிய செவிலியர் விருதிற்குத் தேர்ந்து எடுக்கப் பட்ட 10 இறுதிப் போட்டியாளர்களில் ஒருவராக சண்டிகரைச் சேர்ந்த டாக்டர் சுக்பால் கௌர் பெயரிடப்பட்டுள்ளார்.
- மேற்கு வங்காளத்தில் உள்ள தீஸ்தா களச் சோதனைத் தளத்தில் இந்திய இராணுவம் தீஸ்தா பிரஹார் பயிற்சியை நடத்தியது.
- இந்திய இராணுவம் மற்றும் தேசியப் பேரிடர் மீட்புப் படை (NDRF) ஆகியவை அசாம் மாநிலத்தில் ராஹாத் எனும் பெரிய அளவிலான கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) மாதிரி பயிற்சியினை மேற்கொண்டன.
- பாதசாரிகள் நடைபாதைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமை அரசியலமைப்பின் 21வது சரத்தின் கீழ் உறுதி செய்யப் பட்டுள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் தற்போது அங்கீகரித்துள்ளது.
- 'மத்ஸ்யா' எனும் நீர்மூழ்கி வாகனத்தினைப் பயன்படுத்தி 6,000 மீட்டர் ஆழத்தில் உள்ள கடல் சார் வளங்களை ஆராய்வதற்காக வேண்டி இந்திய நாடானது, 'சமுத்திரயான்' என்ற மனிதர்களால் மேற்கொள்ளப் படும் தனது முதல் ஆழ்கடல் ஆய்வுப் பயணத் திட்டத்தினை 2026 ஆம் ஆண்டிற்குள் தொடங்க உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு உலக வங்கி நில மாநாட்டில், கிராமப்புற நில நிர்வாகத்தில் அதன் மாறுதல் உண்டாக்கும் பணியை அங்கீகரிக்கும் விதமாக இந்தியா ஒரு தேசிய அளவிலான சாம்பியனாக கௌரவிக்கப் பட்டுள்ளது.
- சரஸ்வதி நதிக்கான கும்பமேளா போன்ற சமயச் சடங்கு நிகழ்ச்சியான 12 நாட்கள் அளவிலான சரஸ்வதி புஷ்கரலு, தெலுங்கானா மாநிலத்தில் உள்ள கோயில் நகரமான காலேஸ்வரத்தில் தொடங்கியது.
- சீனாவின் ஷாங்கா நகரில் நடைபெற்ற வில்வித்தை உலகக் கோப்பைப் போட்டியின் இரண்டாம் நிலை போட்டியில், இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலப் பதக்கங்கள் உட்பட ஏழு பதக்கங்களுடன் இந்தியா தனது பங்கேற்பினை முடித்தது.
- ஆயுஷ் அமைச்சகமானது, செப்டம்பர் 23 ஆம் தேதியை ஆயுர்வேத தினமாக அதிகாரப் பூர்வமாக நியமித்துள்ளது.
    - தந்தேராஸ் என்ற நாளில் இந்த நாளைக் கடைப்பிடிக்கும் முற்கால நடைமுறையில் இருந்து இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.
- கலாச்சார, மத அல்லது இன வேறுபாடுகள் பல இருந்த போதிலும் நல்லிணக்கத்துடன் வாழ்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக என்று ஆண்டுதோறும் மே 16 ஆம் தேதியன்று மிகுந்த அமைதியுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஒரு சர்வதேச தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கர்ப்பத்தினை சுயமாகப் பதிவு செய்தல் – தமிழ்நாடு


- மாநில அரசானது, கர்ப்பத்தினை சுயமாகப் பதிவு செய்யும் ஒரு விருப்பத் தேர்வினை

அறிமுகப் படுத்தியுள்ளது.

- திருமணமான பெண்கள் இனப்பெருக்க மற்றும் குழந்தை நலன் குறித்த அடையாள எண்ணைப் பெறுவதற்காக 12 இலக்க எண்ணைப் பயன்படுத்தி https://picme3.tn.gov.in என்ற PICME வலை தளத்தில் பதிவு செய்யலாம்.
- பெண்கள் தேவையான விவரங்களை நிரப்பி, இணைய தளத்தில் குறிப்பிடப் பட்டுள்ள படி ஆவணங்களைப் பதிவேற்ற வேண்டும்.
- ஒரு பெண் தனது குழந்தையினுடைய தந்தையின் பெயரை வெளியிடாமல் இருக்கச் செய்வபதற்கான விருப்பத் தேர்வினையும் தேர்வுசெய்யலாம்.
- ஒரு பெண்ணின் திருமண உறவில் ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டால், புதிதாகப் பிறந்த குழந்தையினுடைய தந்தையின் பெயரை மாற்றும் விருப்பத்தையும் இந்த வலை தளம் வழங்குகிறது.




## புதிய பருவநிலைத் திட்டம் 2025





- வேளாண் ஆராய்ச்சி மையங்களின் உலகளாவிய வலையமைப்பான CGIAR (Consortium of International Agricultural Research Centers) ஆனது, தமிழ்நாட்டிற்கான புதிய பருவநிலை செயல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது சமூகங்கள், குறிப்பாக அடிக்கடி வறட்சி அல்லது வெள்ளப் பாதிப்பினை எதிர் கொள்ளும் மாவட்டங்களில் பருவநிலை அபாயங்களை மிகச் சிறப்பாக நிர்வகிக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பருவநிலைச் செயல் திட்டமானது இந்தச் சவால்களை நிவர்த்தி செய்வதற்காக என்று தற்போது நடப்பில் உள்ள தமிழ்நாடு வறட்சித் தணிப்புத் திட்டத்துடன் ஒன்றியவாறு மேற்கொள்ளப் படும்.

# தேசியச் செய்திகள்

## மாதிரிப் பதிவு அமைப்பின் (SRS) அறிக்கை 2021




- இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகமானது (RGI) 2021 ஆம் ஆண்டு மாதிரிப் பதிவு அமைப்பின் (SRS) அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- 2014–16 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 130 ஆக இருந்த நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது, 2019–21 ஆம் ஆண்டில் 37 புள்ளிகள் குறைந்து 93 ஆக இருந்தது.
- 2014 ஆம் ஆண்டில் 1000 குழந்தைப் பிறப்புகளுக்கு 39 ஆக இருந்த நாட்டின் குழந்தை உயிரிழப்பு விகிதம் (IMR) ஆனது, 2021 ஆம் ஆண்டில் 27 ஆகக் குறைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 1000 குழந்தைப் பிறப்புகளுக்கு 26 என்ற அளவாக இருந்த பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் (NMR) ஆனது, 2021 ஆம் ஆண்டில் 19 என்பதாகக் குறைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 1000 குழந்தைப் பிறப்புகளுக்கு 45 ஆக இருந்த ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் (U5MR) ஆனது 2021 ஆம் ஆண்டில் 31 என்பதாகக் குறைந்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 899 ஆக இருந்த பிறப்பின் போதான பாலின விகிதம் ஆனது, 2021 ஆம் ஆண்டில் 913 ஆக மேம்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 2.0 ஆக நிலை பெற்றுள்ள மொத்த கருவுறுதல் விகிதம் ஆனது 2014 ஆம் ஆண்டில் பதிவான 2.3 என்ற விகிதத்தில் இருந்து குறிப்பிட்ட முன்னேற்றத்தினைக் குறிக்கிறது.
- எட்டு (8) மாநிலங்கள் ஆனது MMR விகிதத்தில் SDG இலக்கை (2030 ஆம் ஆண்டில் MMR <=70) அடைந்துள்ளன.
- இதில் பன்னிரண்டு (12) மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் U5MR விகிதத்தில் SDG

இலக்கை (2030 ஆம் ஆண்டில் U5MR <=25) அடைந்துள்ளன.

- ஆறு (6) மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் NMR விகிதத்தில் SDG இலக்கை (2030 ஆம் ஆண்டில் NMR <=12) அடைந்துள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவில் ஆப்பிரிக்கர்களின் நிலை


- தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள் என்று டிரம்ப் நிர்வாகம் கூறுகிறது.
- வெள்ளை ஆப்பிரிக்கர்கள் தென்னாப்பிரிக்காவில் மிகவும் பணக்கார மற்றும் மிகவும் வெற்றிகரமான மக்களாக உள்ளனர்.
- அந்நாட்டின் மக்கள்தொகையில் சுமார் 7 சதவீதமாக உள்ளன அவர்கள் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான நிலத்தை வைத்திருக்கிறார்கள் மற்றும் பெரும்பாலான உயர் நிர்வாகப் பதவிகளை வகிக்கிறார்கள்.
- சமீபத்தில் நிறைவேற்றப்பட்டச் சொத்துடைமை/பறிமுதல் சட்டம் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தினை விதிவிலக்கான சூழ்நிலைகளில், இழப்பீடு இல்லாமல் ஒரு பொதுப் பயன்பாட்டிற்காக நிலத்தைக் கைப்பற்ற அனுமதிக்கிறது.
- பிப்ரவரி மாதத்தில், டிரம்ப் ஆப்பிரிக்கர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கும் நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.




## HIMARS ஏவு அமைப்பு


- அமெரிக்கா வழங்கிய புதிய ஏவு அமைப்பை தைவான் முதன்முறையாக சோதனை செய்துள்ளது.
- தைவான் லாக்ஹீட் மார்டின் நிறுவனத்தின் 29 துல்லியமான HIMARS எனப்படும் அதிக இயக்குத் திறன் பீரங்கித் துப்பாக்கி அமைப்புகளை வாங்கியுள்ளது.

- அவை சுமார் 300 கிலோமீட்டர் (186 மைல்கள்) வரையிலான தாக்குதல் வரம்பைக் கொண்டுள்ளன.
- HIMARS என்பது ரஷ்யாவுடனான போரின் போது பல முறையாகப் பயன்படுத்தப்பட்ட உக்ரைனின் முக்கிய தாக்குதல் அமைப்புகளில் ஒன்றாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு - ஏப்ரல் 2025




- இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 5.1% ஆக இருந்ததாக முதலாவது மாதாந்திர காலகட்ட அடிப்படையிலான தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) தெரிவித்துள்ளது.
- இது புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டது.
- இதுவரையில், இத்தகையக் கணக்கெடுப்புகளானது காலாண்டு அல்லது வருடாந்திர அடிப்படையில் நடத்தப்பட்டன.
- இப்புதுப்பிக்கப்பட்ட PLFS கணக்கெடுப்பில், கிராமப்புறங்களில் இருந்து பெறப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மைத் தரவுகளும் அடங்கும்.

- இதில் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது ஆண்களிடையே சுமார் 5.2% ஆகவும், பெண்களிடையே 5% ஆகவும் சற்று அதிகமாகவே இருந்தது.
- நாடு முழுவதும் 15 முதல் 29 வயதிற்குட்பட்டவர்களிடையே வேலைவாய்ப்பின்மை விகிதம் 13.8% ஆக இருந்தது.
- நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 17.2% ஆகவும், கிராமப்புறங்களில் 12.3% ஆகவும் இருந்தது.
- நாடு முழுவதும், 15 முதல் 29 வயதிற்குட்பட்ட பெண்களிடையே வேலைவாய்ப்பின்மை விகிதம் (UR) 14.4% ஆக இருந்தது (கிராமப்புறம் + நகர்ப்புறம்).
- இது நகர்ப்புறங்களில் 23.7% ஆகவும், கிராமப்புறங்களில் 10.7% ஆகவும் இருந்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முக்கிய அதிமீயொலி தொழில்நுட்பத்தில் புதிய மைல்கல்

- ஸ்க்ராம்ஜெட் இயந்திரத்தின் கள சோதனையை ஆயிரம் வினாடிகளுக்கு மேல் மிக வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அதிமீயொலி தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டி உள்ளது.
- அதிமீயொலி சீர்வேக எறிகணை என்பது நீண்ட காலக் கட்டத்தில் ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு அதிகமான வேகத்தில் பயணிக்கக் கூடிய ஒரு வகை ஆயுதமாகும்.
- இது நீண்ட காலச் செயல்பாட்டுச் சூழல்களுக்கு முக்கியப் பங்கு வகிக்கின்ற காற்று வெளியீட்டு இயந்திரத்தால் இயக்கப்படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## சிக்கிம் மாநில அந்தஸ்தின் 50 ஆண்டு கால நிறைவு

- ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, அரசியலமைப்பின் 371-Fவது சரத்தில் குறிப்பிடப் பட்டு


உள்ள அதற்கான மற்றும் அதன் மக்களுக்கான சிறப்பு விதிமுறைகள் மூலம் சிக்கிம் இந்தியாவின் 22வது மாநிலமாக மாறியது.

- 1975 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு, சிக்கிம் ஆனது 1642 ஆம் ஆண்டு முதல் நம்கியால் வம்சத்தினால் ஆட்சி செய்யப்பட்ட ஓர் இறையாண்மை கொண்ட இமயமலையின் ராட்சியமாக இருந்தது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியாவானது சுதந்திரம் பெற்ற பிறகு, சிக்கிம் 1950 ஆம் ஆண்டில் இந்தியாவின் பாதுகாப்பின் கீழான ஒரு பகுதியாக மாறியது.
- அது அதன் உள் சுயாட்சியைத் தக்க வைத்துக் கொண்டாலும், இந்தியா அதன் வெளி விவகாரங்கள், பாதுகாப்பு துறை மற்றும் தகவல் தொடர்புகளை தனது கட்டுப்பாட்டில் எடுத்தது.
- 1975 ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பில், சுமார் 97 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் இந்தியாவில் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 36வது அரசியலமைப்பு திருத்த மசோதாவானது 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதி அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு, சிக்கிம் ஆனது 1975 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதியன்று இந்திய மாநிலமாக மாறியது.




# முக்கிய தினங்கள்

## உலக தொலைத்தொடர்பு தினம் 2025 - மே 17




- இத்தினமானது சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) நிறுவன தினத்தை

நினைவு கூர்கிறது.

❖ 2025 ஆம் ஆண்டில், ITU அதன் 160வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

❖ இன்றைய உலகில் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பங்களின் பெரும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Gender Equality in Digital Transformation" என்பதாகும்.


## உலக உயர் இரத்த அழுத்த தினம் 2025 - மே 17

❖ உயர் இரத்த அழுத்தத்துடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அதன் தடுப்பு மற்றும் மேலாண்மைக்கான பயனுள்ள பல்வேறு உத்திகளை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ உயர் இரத்த அழுத்தப் பாதிப்பு உள்ளவர்களின் எண்ணிக்கை 15 முதல் 20% அதிகரித்து, 2025 ஆம் ஆண்டிற்குள் 150 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ மருத்துவமனைகள் மற்றும் மருத்துவமனைகளில் பதிவாவதுடன் ஒப்பிடும் போது, உயர் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளில் இல்லங்களில் பரிசோதிக்கப்படும் போது "white coat hypertension" என்று அழைக்கப்படும் ஒரு சாதாரண இரத்த அழுத்தம் பதிவானது.

❖ 2021-2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Measure Your Blood Pressure Accurately, Control It, Live Longer" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★